©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 29] சென்னை, புதன்கிழமை, ஜூலை 21, 2021
ஆடி 5, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I2)த் துறை 24 மே 2021.]*

**தமிழ்நாடு 1982–ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 32ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். அவையாவன:–**

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) விதி 3 இன் பகுதி (b) இல்,–

(a) "தொழிலாளர் இணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலாளர் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) "தொழிலாளர் துணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலாளர் இணை ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) விதி 18 இல்,–

(a) துணை விதி (1) இல், "தொழிலாளர் துணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலாளர் இணை ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்

(b) துணை விதி (2) இல், "தொழிலாளர் அலுவலர் அல்லது மலைத் தோட்டப்பயிர்கள் ஆய்வாளர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலாளர் உதவி ஆணையர் அல்லது தொழிலாளர் உதவி ஆணையர் (மலைத் தோட்டப்பயிர்கள்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-II**

*[அரசாணை (நிலை) எண் 78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I2)த், துறை 24 மே 2021.]*

**தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார் அதாவது.–**

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில், – "தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)" என்ற சொற்றொடர் வரும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**முகம்மது நசிமுத்தீன்,**
*கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
இயக்குநர்,
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.